திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் சார்பில் தாய்சேய் நலனை மேம்படுத்தும் வகையில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்வில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் கலந்து கொண்டு 100 கர்ப்பிணி பெண்களுக்கு தட்டு, மஞ்சள், குங்குமம், பூ, பழம் மற்றும் பொன்னான ஆயிரம் நாட்கள் குறித்த மடிப்பேடு அடங்கிய மங்களப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன். மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி. மதுபாலன், மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.பாலாஜி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கங்காதாரிணி, மாவட்ட நகர் ஊரமைப்பு குழு உறுப்பினர் வைரமணி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலர் திருமதி.மா.நித்யா, வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் மண்டலத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட 4 மண்டலங்களில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் 229 எண்ணிக்கையில் 45.221கி.மீ நீளம் தார்சாலை அமைக்கும் பணியினை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மேயர் நாகரத்தினம், மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், துணை மேயர் வி.செல்வராஜ், உதவி வன பாதுகாவலர் (பயிற்சி) நிதின் ஹெச்.ஆர், மண்டல குழு தலைவர் ப.க.பழனிசாமி, மாமன்ற உறுப்பினர் செல்லபொன்னி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டம், கொளக்காநத்தம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்

மாணவ, மாணவிகளுக்கான சமூகநீதி விடுதிகள்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் – அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்து சிறப்புரை!

பெரம்பலூர்,பிப்,15

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில், கொளக்காநத்தம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ,மாணவிகளுக்கான சமூகநீதி விடுதிகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் இருவரும், மாவட்ட வருவாய் அலுவலர் க.கண்ணன் தலைமையில் கொளக்காநத்தத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னாள் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் ந.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசுகையில்,

அரசுப் பள்ளி கல்லூரி மாணவ, மாணவிகளின் நலன் கருதி முதலமைச்சர் அவர்கள், பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். முதல மைச்சரின் காலை உணவுத் திட்டம், கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம், அன்புக் கரங்கள் திட்டம், நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ் புதல்வன், உயர்வுக்கு படி என மாணவர்களின் பள்ளிக் கல்விக்கும், உயர்கல்விக்கும் எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த மாணவ/மாணவியர்கள் தங்களது கல்வியினை சிரமமின்றி தொடர வேண்டும் என்ற நோக்கத்தில் கல்வி நிலையங்களுக்கு அருகில் இலவச உணவு மற்றும் தங்குமிட வசதியுடன் கூடிய பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் நடத்தப்பட்டு வருகின்றது.

அதுமட்டுமின்றி மிதிவண்டிகள் வழங்கும் திட்டம், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் திட்டம், டாம்கோ திட்டம்,இலவச தையல் இயந்திரம் மற்றும் தேய்ப்பு பெட்டி வழங்கும் திட்டம், கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம்,முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்,பெண்கல்வி ஊக்கத்தொகை திட்டம், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாக பெரம்பலூர் மாவட்டத்தில் 26 சமூக நீதி பள்ளி விடுதிகள் மற்றும் 10 சமூக நீதி கல்லூரி விடுதிகள் செயல்பட்டு வருகிறது இவ்விடுதிகளில் நடப்பாண்டில் 945 பள்ளி,கல்லூரி மாணவர்கள் மற்றும் 1582 பள்ளி,கல்லூரி மாணவியர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். அந்த வகையில் இன்று கொளக்காநத்தத்தில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மாணவ, மாணவிகளுக்கு சமூக நீதி விடுதிகள் திறக்கப்பட்டுள்ளது, முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் மக்களுக்கு நலன் பயக்கும் ஏராளமான திட்டங்களை செயல்படுத்திவரும் முதலமைச்சர் அவர்களுக்கு அனைவரும் என்றும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தாவது -

முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புதுப்புது திட்டங்களை வகுத்து அதை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் கலைஞர் மகளிர் உரிமை தொகை, இலவச மகளிர் பேருந்து பயணத் திட்டம், இன்னுயிர் காப்போம் திட்டம், கலைஞர் கனவு இல்லம் திட்டம், அன்புக்கரங்கள் திட்டம் போன்ற திட்டங்கள் என இந்தியா மட்டுமல்ல உலகமே உற்று நோக்கும் வகையில் திட்டங்களை வழங்கி அனைத்திலும் முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டியவர் முதலமைச்சர் அவர்கள்.

பெரம்பலூர் மாவட்டம். குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொளக்காநத்தம் பகுதியில் உள்ள மாணவ, மாணவியர்கள் மேல்நிலைக் கல்வி முடித்துவிட்டு கல்லூரி பயல திருச்சி, பெரம்பலூர், அரியலூர் போன்ற பகுதிகளுக்குச் சென்று உயர்கல்வி பயிலும் சூழல் இருந்தது. இதனை கருத்தில் கொண்டு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கும் போது உடனடியாக இந்த பகுதிக்கு ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அறிவித்து தொடங்கி வைத்தார்கள்.

சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் ரூ.1 கோடி வழங்கி, கல்லூரிக்கான கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றது. தற்போது கல்லூரிக்கான கட்டடங்களை முழுவதுமாக கட்டி முடிக்க ரூ.18.10கோடி நிதி ஒதுக்கீடு வழங்கி, எதிர்வரும் 16.2.2026 அன்று முதலமைச்சர் அவர்கள் கல்லூரி கட்டடம் கட்டும் பணிகளுக்கு காணொலிக்காட்சி வாயிலாக அடிக்கல் நாட்ட உள்ளார்கள்.

இன்று அனைத்து மகளிருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையாக ரூ.5000 அனைவரின் வங்கிக்கணக்கிலும் வரவு வைக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் ஆகிய மாதங்களுக்கான தொகையாக ரூ.3,000ம், கோடை கால செலவினத் தொகையாக ரூ.2,000ம் என மொத்தம் 5,000 வழங்கப்பட்டுள்ளது. தேர்தலை காரணம் காட்டி மகளிருக்கு வழங்கப்படும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையினை நிறுத்துவதற்கு சிலர் செய்த சூழ்ச்சிகளை முறியடிக்கும் வகையில், முதலமைச்சர் அவர்கள் அதிரடி முடிவெடுத்து அனைத்து மகளிருக்கும் இன்ப அதிர்ச்சி வழங்கி உள்ளார்கள். மகளிர் முன்னேற்றத்திற்காகவும், பொருளாதார ரீதியாக அவர்களை முன்னேற்றுவதற்காகவும் திட்டங்களை செயல்படுத்தும் முதலமைச்சர் அவர்களுக்கு என்றென்றும் நீங்கள் அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விழாவில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில், 6 பயனாளிகளுக்கு ரூ.31,200 மதிப்பில் மின் மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்களை மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், கொளக்காநத்தம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் கண்ணதாசன், மாவட்ட தாட்கோ பொது மேலாளர் கவியரசு, வட்டாட்சியர் முத்துக்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் சங்கீதா, வாசுகி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

நிவேதா எம் முருகன் எம்.எல்.ஏ., தலைமை! ம.சுப்பராயன் வரவேற்புரை!

சீர்காழி சட்டமன்றத் தொகுதியில் 'தமிழ்நாடு தலைகுனியாது' சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

அமைச்சர் கோவி,செழியன் சிறப்புரை! குத்தாலம் பி,கல்யாணம் - எம்,பன்னீர்செல்வம் எம்,எல்,ஏ, பங்கேற்பு!

மயிலாடுதுறை பிப்.15-

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி பழைய பேருந்து நிலையத்தில் சீர்காழி சட்டமன்றத் தொகுதி தமிழ்நாடு தலைகுனியாது திராவிட மாடல அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் தலைமை தாங்கினார். சீர்காழி நகர கழக செயலாளரும், நகர் மன்ற துணைத் தலைவர் ம.சுப்பராயன் வரவேற்றார்.

ஒன்றிய கழக செயலாளர்கள் செல்லசேது.ரவிக்குமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், மலர்விழி திருமாவளவன், பஞ்சு.குமார், வைத்தீஸ்வரன் கோயில் பேரூர் கழக செயலாளர் எம்.அன்புச்செழியன், சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரிராஜசேகர், ஒன்றியக் குழு முன்னாள் தலைவர்கள் கமலஜோதி தேவேந்தின், வி.ஜெயபிரகாஷ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் இரா. காழிகலைவாணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கழக உயர் நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி. கல்யாணம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், சீர்காழி சட்டமன்ற தொகுதி பார்வையாளரும், தலைமை கழக வழக்கறிஞர் மு.தினேஷ் குமார், தகவல் தொழில் அணி மாநிலத் துணைச் செயலாளர் பி.எம் ஸ்ரீதர், விவசாய தொழிலாளர் அணி மாநில இணை செயலாளர்ஜக.வீரபாண்டியன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முத்து. மகேந்திரன், ஜி என்.ரவி, இராம. இளங்கோவன், மாவட்ட கழக அவைத் தலைவர் கே ஜி சீனிவாசன் துணை செயலாளர் கண்ணகி பன்னீர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் வைத்தீஸ்வரன்கோவில் எஸ். சுவாமிநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி. கென்னடி பி.சிவதாஸ், சுபா நெடுஞ்செழியன், நத்தம் ஏ. வின்சென்ட், ஹர்ஷத், ஒன்றிய குழு முன்னாள் தலைவர் தியாக.விஜேஸ்வரன், மாவட்ட சார்பு பணி அமைப்பாளர்கள் எம். கே.மருது, காளி தேசப்பன், தீபா சத்தியேந்திரன் எம்.எஸ்.முத்துகுபேரன், அரசு வழக்கறிஞர் சி. அருள்தாஸ், தலைமைக் கழக பேச்சாளர் கோமல் விஜய், மாவட்ட ஊராட்சி குழு முன்னாள் உறுப்பினர் விஜயபாரதி கென்னடி, மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் ஜி.என்.ஜீவராஜ், எஸ்.ஆனந்தன், ஜெ. ஜுபையர் அகமது, ஏ. இளையராஜா, ராமு, ஆனந்தன், எஸ்.எம்.சம்சுதீன், . விவேக் எம்.என். கமால், ஒன்றிய குழு முன்னாள் துணைத் தலைவர் உஷா நந்தினி பிரபாகர், சீர்காழி நகர கழக முன்னாள் செயலாளர் இரா. பொன்முடி, சீர்காழி நகர அவை தலைவர் ஏ.குகன், துணைச் செயலாளர்கள் ஆர்.எம்.முத்து, ஏ. மகாராஜன், சிவப்பிரியா துரை, நகர பொருளாளர் சி.சங்கர் மாவட்டபிரதிநிதி ஏ.பி. எஸ்.பாஸ்கர்,

மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் இரா. தன்ராஜ், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் எஸ்.வி.ஆர். திருச்செல்வன், முன்னாள் நகர துணை செயலாளர் சு.மணி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் வி.ஆர்.டி. முத்துக்குமார், நகர இளைஞரணி அமைப்பாளர் டிபி ரவீன், தகவல் தொழில் நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் ஆர். ஸ்ரீராம், நகர வர்த்தக அணி இந்திரஜித், மற்றும் பாலமுருகன், பால. பரணிதரன், அரசூர் எஸ்.சிவா. மற்றும் மாவட்ட, ஒன்றிய நகர பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளில் முன்னாள் பிரதிநிதிகள், நகர மன்ற உறுப்பினர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள்,கழக நிர்வாகிகள் கழகத்தினர் ஏராளமான கலந்து கொண்டனர்.

முடிவில் சீர்காழி மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஏ.ஜி.ஜெ. பிரபாகர் நன்றி கூறினார்.

திருவாரூர் மாவட்டம்

தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்! வேட்பு மனுத் தாக்கல்

தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் திருவாரூர் மாவட்டத்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர்.எஸ்.பாண்டியன் அவர்கள், திருத்துறைப்பூண்டி நகரக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து வருவதால், கழக சட்டதிட்ட விதிகளின்படி, 'ஒருவருக்கு ஒரு பொறுப்பு' என்ற அடிப்படையில், ஆர்.எஸ்.பாண்டியன் அவர்கள், தான் வகித்து வந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதால்;

திருவாரூர் மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2026, பிப்ரவரி 17 (செவ்வாக்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் திருவாரூர் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 14.02.2026

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம்!

ஆதிதிராவிடர்நலக்குழுச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் வருகிற 17-02-2026 செவ்வாய்க்கிழமை, நண்பகல் 12.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

1. தமிழ்நாடு முதலமைச்சர்,கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள்.
2. 2026 சட்டப்பேரவை பொதுத் தேர்தல் - குறித்து

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 14.02.2026

ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ.,
செயலாளர்,
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

நாகை மாவட்டம் நாகை மாவட்ட கழக அலுவலகமான தளபதி அறிவாளிகத்தில் நாகை சட்டமன்ற தொகுதி அளவில் பாகத்திற்கு ஒருவரை பொறுப்பாளராக தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இல்லம்தோறும் பரப்புரை பற்றிய பயிற்சிக்கான வெல்லும் தமிழ்ப்பெண்கள் என்ற தலைப்பில் ஸ்டாலினின் மகளிர் படைக்கு பரப்புரை பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் பேசினார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் செல்வ.செங்குட்டுவன், ஆர்.டி.எஸ். சரவணன் நகர கழக செயலாளர்கள் இரா.மாரிமுத்து எம்.ஆர். செந்தில்குமார்,பொதுக்குழு உறுப்பினர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, எஸ்.பால்ராஜ், பி முருகானந்தம், த.தமயந்தி, புவனேஸ்வரி செந்தில் மற்றும் பலர் உள்ளனர்.

தர்மபுரி கிழக்கு மாவட்டம் தர்மபுரி சட்டமன்ற தொகுதி தர்மபுரி மேற்கு நகர பொறுப்பாளர் எம்.பி. கௌதம் தலைமையில் நடைபெற்ற "உங்களைத் தேடி உங்கள் நகராட்சியில் கூட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி. கலந்து கொண்டு 2026 சட்டமன்றத் தேர்தலில் செய்ய வேண்டிய ஆக்கப் பணிகள் குறித்து சிறப்புரை ஆற்றினார். உடன் முன்னாள் மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ. சுப்ரமணி,தர்மபுரி தொகுதி பார்வையாளர் டி செங்குட்டுவன்,மாவட்ட நிர்வாகிகள் வே.தங்கமணி,ரேணுகாதேவி, மே.அன்பழகன்,தாஸ், அழகுவேல்,சம்மந்தம்,வடிவேல், சௌந்தரராஜன்,பாஸ்கர், வெங்கடாசலம்,தமிழ்ச்செல்வன், சாந்தரூபிணி,இளைஞர் அணி அசோக்குமார்,ரஹிம்,ஹரிவிக்னேஷ்,உஷா ராஜேந்திரன் உள்ளிட்ட திமுகவினர் உள்ளனர்.